Regstered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (2-4-66) இதழ் 54

விசுவாவசு பங்குனி 20 துல்ஹஜ் பிறை 10 சனிக்கிழமை

பீடிகளில் சிறந்தது!

பீடி உலகில்
சிறந்து விளங்குவது
முல்லா பீடிகளே

தயாரிப்பாளரும்
விநியோகஸ்தர்களும்:
முல்லா பீடி கம்பனி
கே.கே.எஸ். ரோட் - யாழ்ப்பாணம்.

### தமிழ்சட்டவிதிகள்

கிளிநொச்சி, வெள்ளி

தமிழ்சட்டவிதிகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான சுற்றறிக்கை எப்போது வெளியிடப்படுமென்று கேட்டு திறைசேரிக் காரியதரிசி திரு. ஜி. சமரகொடிக்கு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதுபற்றிய சுற்றறிக்கையொன்று விரைவில் வெளி

(6-ம் பக்கம் பார்க்க)

## ★ தொழிற் கட்சி 362 ஸ்தானங்கள் ★ கான்ஸர்வேட்டிவ் கட்சி 252 ஸ்தானங்கள் ★ லிபரல் கட்சி 10 ஸ்தானங்கள்

# பிரிட்டிஷ் தேர்தல் முடிவுகள்

## வில்ஸன் கட்சி பெரும்பான்மை

### பலத்துடன் மீண்டும் பதவிக்கு வந்தது

லண்டன்,ஏப்.1

நேற்று நடைபெற்ற பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் திரு.ஹரோல்ட் வில்ஸனின் தொழிற்கட்சி 362 பெரும்பான்மை ஸ்தானங்களால் வெற்றிபெற்றிருக்கிறது எதிர்க்கட்சித்தலைவர் திரு. எட்வேர்ட் ஹீத்தின் கான்ஸர் வேட்டிவ் கட்சி 252 ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறது.

பிரிட்டிஷ் பொதுத்தேர்தலின் முழு முடிவுகளும், (இலங்கை நேரப்படி) இன்று நள்ளிரவுக்குச் சற்று பின்னரே வெளியானது.

கட்சி நிலைவரம் வருமாறு:

| | |
|---|---|
| தொழிற்கட்சி | 362 ஸ்தானங்கள். |
| கன்ஸர் வேட்டிவ்கட்சி | 252 ஸதானங்கள். |
| லிபரல் கட்சி | 10 ஸதானங்கள். |
| இதர கட்சிகள் | 02 ஸதானங்கள். |

காமன்ஸ சபையின் மொத்தஸதானங்கள்: 630.

முன்னாள் பிரதமர் சேர்.அலெக்ஸ்டக்ளாஸ் ஹியூம் இத் தேர்தலில் வெற்றிபெற்றிருக்கிறார்.

(விபரம் மூன்றும பக்கம் பார்க்க)

உலக தமிழாராய்ச்சி மகாநாடு

## ஆசியா பவுண்டேஷன் ஸ்தாபனம் 20,700 வெள்ளி வழங்கியது!

### நிதி சேர்ப்பதில் மந்திரி தீவிரம்

கோலாலம்பூர், மாார்ச் 1

இம்மாதம் இங்கு நடைபெறவிருக்கும் உலக தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு நிதி சேர்ப்பதில் மலேசிய தொழிலாளர் மந்திரி திரு. வெ. மாணிக்கவாசகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

ஆசியா பவுண்டேஷன் ஸ்தாபனம் மாத்தம் 20,700 வெள்ளி வழங்கியிருப்பதாக பேராசிரியர் தனிநாயக அடிகளார் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருக்கும் ஆசியா பவுண்டேஷன் தலைவர்களும், பொறுப்பாளர்களும் கருத்தரங்கு சிறப்பாக நிகழவேண்டுமென்று கருதி மலாயா பல்கலைக்கழகத்தின் இந்தியப்பகுதி மேற்கொண்டிருக்கும் ஆராய்ச்சிகளை மதிப்பிட்டு இந்நன்கொடையை வழங்கியிருப்பதாக அடிகளார் அறிவித்தார்.

இலங்கையிலிருந்து தமிழறிஞர்கள் மூவர் வருவதற்கும், இந்தியாவிலிருந்து அறிஞர்கள் சிலர் வருவதற்கும், ஜப்பானிலிருந்துமூவர் வருவதற்கும் வேறு சில ஆசிய நாடுகளிலிருந்து அறிஞர்கள் வருவதற்கும்ஆசியா பவுண்டேஷன் ஸ்தாபனத்தினர் பிரயாணச் செலவு கட்டுவதற்கு எண்ணியிருப்பதாக அறியப்படுகிறது.

ஆராய்ச்சி கருத்தரங்கு மகாநாட்டு நிதிக்கு இதுவரை எறத்தாழ 1 1/2 லட்சம் வெள்ளி சேர்ந்திருப்பதாக நிதிக்குழுவின் தலைவரும், தொழிலாளர் மந்திரியுமான திரு. வெ. மாணிக்கவாசகம் தெரிவித்துள்ளார்.

உலக தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெறுவதற்கு இன்னும்சிலநாட்களேஇருப்பதால் மகாநாட்டை நல்லமுறையில் நடாத்துவதற்கு நன்கொடைகள் தந்துதவுமாறு மந்திரி மாணிக்கவாசக கேட்டுள்ளார்.

பணமுள்ளவர்களும், மனமுள்ளவர்களும் பெருந்தொகையாயினும் சிறுதொகையாயினும் உடனே அனுப்பிவைத்து மகாநாட்டுக்குவெற்றிக்கு உதவும்படி திரு மாணிக்கவாசகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

நிகழவிருக்கும் ஆராய்ச்சி மகாநாட்டினை தமிழ் துறைகளின் உலக ஆராய்ச்சிக் கருத்தரங்கு என்று குறிப்பிடுவதே பொருத்தம் என்றும் தனிநாயக அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

## 2500 இளைஞர்கள் குடியேற்றப்படுவர்

### வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

அடுத்த நிதியாண்டுக்குள் மேற்கொள்ளப்படவிருக்கும் இளைஞர் குடியேற்றத் திட்டம் ஒன்றின்படி 2,500 இளைஞர்கள் குடியேற்றப்படவிருக்கிறார்கள்.

நெல் உற்பத்தி,உபஉணவு உற்பத்தி,கால்நடைகள்வளர்த்தல், தேயிலை உற்பத்தி போன்ற அம்சங்களில் இந்த இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கப்படுவதுடன் தாம் குடியேறும் பகுதிகளில் இத்தொழில்களை முறையாகக் கைக்கொள்வதற்கும் இவர்களுக்குஉதவியளிக்கப்படும். இளைஞர்கள் மத்தியில்வேலையில்லாத் திண்டாட்டத்தையொழிக்க இத்திட்டம் பெரிதும்உவுதமென்று நம்பப்படுகின்றது.

இத்திட்டத்தின்படி ஒரு இளைஞருக்கு 2 ஏக்கர் உயர்ந்த பூமியும் நெல் சாகுபடிக்கு ஒரு ஏக்கர் நிலமும் வழங்கப்படும்.

வத்தளை, மட்டக்களப்பு உட்பட வேறு சில இடங்களிலும் இத்திட்டம் அமுல் நடத்தப்படும். கடந்த ஆண்டு மையங்கனை தேர்தல் தொகுதியில் இத்திட்டம் அமுல் நடத்தப்பட்டது.

இளைஞர்களைக் குடியமர்த்தும் இத்திட்டத்துக்கு எம். ஆர். ஏ. ஆஸியாபவுண்டேவுன், கேர் ஸ்தாபனம் போன்றவை மானியங்களும் இதர உதவிகளும் வழங்க முன்வந்திருப்பதாகத் தெரிகின்றது.

### தேசிய சுவீப் முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் 83-வது தேசிய சுவீப் சீட்டிழுப்பில் பரிசுபெறும் டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| முதலாவது பரிசு | |
| 19 V 0177 | ரூ. 50,000 |
| இரண்டாவது பரிசு | |
| 22 V 0427 | ரூ. 20,000 |
| மூன்ருவது பரிசு | |
| 08 X 0667 | ரூ. 5,000 |

(6-ம் பக்கம் பார்க்க)

### சிவலிங்க பிரதிஷ்டை

வேலணை, வெள்ளி

காசியிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள சிவலிங்கம் வேலணை கிழக்கு பெருங்குளம் முத்துமாரியம்பாள் ஆலயத்தின் முன்னால் அமைந்துள்ள நால்வர்மடத்தில் இம்மாதம் 4-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு பிரதிஷ்டைசெய்யப்படவிருக்கிறது.

திருக்கேதீச்சரப்புனருத்தாரணசபையில் பணியாற்றிய திரு. வ. க. செல்லப்பா வட இந்திய யாத்திரையை முடித்துவருகையில் இச் சிவலிங்கத்தை இங்கு எடுத்துவந்தார்.

## பிரிட்டிஷ்மந்திரிசபை; இப்போதுமாற்றமில்லை

### வில்ஸன் அறிவிப்பு

லண்டன், ஏப்ரல் 1

பிரிட்டிஷ் மக்கள் ஸ்திரமான அரசாங்கம் ஒன்றையே விரும்புகிறார்கள் என்றும், எனவே 23 பேர் கொண்ட மந்திரிசபையில் உடன் மாற்றம் எதுவும் இருக்காது என்றும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் அறிவித்தார்.

பொதுத் தேர்தல் முடிவு தமக்கு மாபெரும் வெற்றி என்றும் திரு. வில்சன் வருணித்தார். தமது அரசாங்கம் கஷ்டமான பிரச்னைகளை எதிர்நோக்கியிருப்பதாயும், பொருளாதார, சமூகப் பிரச்னையே அவை என்றும் டெலிவிஷன் பேட்டியில் பிரதமர் கூறினார்.

எனினும் லேட்டன் தொகுதியில் வெற்றிபெற்ற திரு. பெட்ரிக் கோர்டன் வாக்கருக்கு ஒரு முக்கிய பதவி கிடைக்கும் என்றும், அநேகமாக அவர் வெளிநாட்டு மந்திரியாக நியமிக்கப்படக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

தற்போதைய வெளிநாட்டுமந்திரி திரு. ஸ்டுவர்ட்டெலிவிஷனில் பேசியபோது பிரிட்டன் தனது அத்தியாவசிய நலன்களைப் பாதுகாக்கும் அதேசமயம், ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேர்வதுபற்றியும் யோசிக்க வேண்டும் என்றார்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தொழிற்கட்சி 304 ஸ்தானங்களையும் கன்சர்வேட்டிவ்கட்சி 151 ஸ்தானங்களையும் பெற்றிருக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

''இன்பம்-இன்பம்-இறவா இன்பம்-வரம்பி லின்பம்-துன்பமில்லா இன்பம்-பரிபூரண இன்பம்-அதுவே என்னுல் வேண்டப்படுவது. அதையே எனக்குக் கொடு.''

— யோகர் சுவாமிகள்

ஈழநாடு

EALANADU National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELANADU Jaffna. Phone: 349

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு பங்குனி மீ 20 உ (2-4-66)

## தொழிற் கட்சியின் வெற்றி

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் தொழிற் கட்சிக்குப் பெரு வெற்றி கிடைத்திருக்கிறது. இந்த வெற்றி திரு. வில்சனின் தலைமையிலான தொழிற் கட்சி அரசாங்கம் மிகக் குறுகிய காலத்துக்குள் வெளி நாட்டுப் பிரச்னைகளிலும் உள்நாட்டுப் பிரச்னைகளிலும் கடைப்பிடித்த நிதானமான கொள்கைக்கு கிடைத்த வெற்றிமட்டுமல்லாது, பிரிட்டிஷ் மக்கள்பின்பற்றும் ஜனநாயக பாரம்பரியத்துக்கும் கிடைத்த வெற்றி யாகும்.

பிரிட்டனில் இரண்டு கட்சிகளுக்கு மேற்பட்ட கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டாலும் ஸ்திரமான அரசாங்கமும் வலுவான எதிர்க் கட்சியும் இருக்கவேண்டுமென்பதே பிரிட்டிஷ் மக்களின் ஜனநாயகதத்துவமாகும். இதனுல் அவர்கள் தாங்களே மூன்ருவது கட்சியை நிராகரித்து ஸ்திரமான அரசாங்கம் அமைக்க ஒரு கட்சியையும்வலுவான எதிர்க்கட்சிக்கு ஒரு கட்சியையும் தெரிவு செய்கின்றனர்.

சென்ற பொதுத் தேர்தலில் ஸ்திரமான அரசாங்கம் அமைக்கும் வாய்ப்பு தொழிற் கட்சிக்கு அளிக்கப்படவில்லை. இதனுல்பல தடவைகள் தொழிற்கட்சி அரசாங்கம் செத்துப் பிழைக்க நேரிட்டது. இதேசமயம், ரொடீஷியா, வியட்னும் பிரச்னைகள் பெரிதாக உருவெடுத்து அரசாங்கத்துக்குப்பல சோதனைகளை ஏற்படுத்தின. ஆனல் இந்த வெளிநாட்டுப்பிரச்னைகளிலும் பொருளாதாரம், பாதுகாப்புபோன்ற உள்நாட்டுப் பிரச்னைகளிலும் தொழிற்கட்சி அரசாங்கம் தீவிரமான போக்கைப் பின்பற்ருமல் நிதானத்தைக் கடைப்பிடித்துவந்தது. இந்தக் கொள்கைதான் அந்தக் கட்சி இம்முறை பெரு வெற்றியீட்டக் காரணமாகும்.

சீன, சோவியத் யூனியன் ஆகிய கம்யூனிஸ்ட் நாடுகளுடன் கடுத்தமான போக்கைப் பின் பற்ருமலும் மேற்கத்திய நாடுகளுடன் உறவு கெடாமலும், ரொடீஷியா போன்ற சிக்கலான பிரச்னைகளில் படைபலத்தை உபயோகிக்காமலும் காமன்வெல்த் நாடுகளுடன் பக்ஷசார்பின்றியும் திரு. வில்சனின் தலைமையிலான தொழிற்கட்சி அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கையும், பிரிட்டிஷ் பொதுமக்கள், ஜனநாயக பாரம்பரியத்தை பாதுகாத்துவரும் முறையும், ஜனநாயக முறையைப் பின்பற்றும் இலங்கை உள்ளிட்ட இதர நாடுகளுக்கு சிறந்த முன்மாதிரியாகும்.

## யாழ்ப்பாண நகரமேயர்

யாழ்ப்பாண நகரின் புதிய மேயராக திரு. அல்பிரட் தங்கராசா துரையப்பா தெரிவு செய்யப்பட்டுள்ளார். மாநகர சபையின் அங்கத்தவர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பைப் பெற்று நகரின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும், அனுபவமும் ஆர்வமுமுள்ள திரு. துரையப்பா தமது ஆற்றலைச் செலவிடுவாரென எதிர் பார்ப்போம்.

நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வருவதும் புதிய மேயர்கள் தெரிவு செய்யப்படுவதும் யாழ்ப்பாண நகரத்தைப் பொறுத்தவரையில் புதிய விஷயங்களல்ல. திரு. துரையப்பா முன்னரும் மேயராக இருந்து யாழ்ப்பாண நகர மக்களின் பாராட்டையும் நம்பிக்கையையும் பெற்றவர். தாம் கட்சி வேறுபாடு எதுவுமின்றி நகரின் முன்னேற்றத்துக்கான பல புதிய திட்டங்களை வெகு விரைவில் கொண்டுவந்து நிறைவேற்ற விருப்பதாகவும் வட்டாரங்களுக்கிடையில் வேறுபாடுகாட்டப் போவதில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார். இது மகிழ்ச்சியும் ஆறுதலுமளிப்பதாகும். புதிய மேயரைத் தெரிவு செய்வதற்காக நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் ஏழு அங்கத்தவர்கள் கலந்துகொள்ளவில்லை. இதற்கான காரணத்தை அவர்கள் இதுவரை தெரிவிக்கவுமில்லை.

காரணம் எதுவாக இருப்பினும், அவர்களும் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களென்பதையும் எந்த வட்டாரத்து மக்கள் தம்மையும் தம்மை ஆதரித்தவர்களையும் தெரிவு செய்திருந்தாலும் தாம் யாழ்ப்பாண நகரின் மேயர் என்பதையும் திரு. துரையப்பா உணர்ந்து பாகுபாடு எதுவுமின்றி நகரின் முன்னேற்றத்துக்கான நல்ல திட்டங்களை சகல அங்கத்தவர்களினதும் ஒத்துழைப்பைப் பெற்று நிறைவேற்ற வேண்டும். மேயர் தெரிவில் தம்மை ஆதரித்தவர்களும் ஆதரிக்காதவர்களும் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். எதிர்க்கட்சியினருக்கு கருத்து வேற்றுமையிருக்கலாம். ஆனுல் அவர்கள் பகைவர்களல்லர்.

மாநகரசபையின் அடுத்த தேர்தல் இன்னும் ஒன்பது மாதங்களில் நடைபெறவிருக்கிறது. இக்குறுகிய காலத்துக்குள்ளாவது நகரின் சீர்கேடுகளை நீக்கி மக்களுக்கு வசதி செய்ய மாநகரசபை தவறுமானுல், மாநகரசபை நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வரும் நகர மக்கள் தங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது சரியான பதில் சொல்லத் தவறமாட்டார்கள்.

# "பல்கலைக்கழகங்களுக்கு சுயபரிபாலன உரிமை அவசியம்"

## அரசாங்கத்துக்கு கல்லூரி அதிபர்கள் மகஜர்

பல்கலைக்கழகங்கள் அமைப்பது பற்றி உத்தேசிக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் பல்கலைக்கழகங்களுக்கு இன்றெல்லாம் இருந்துவரும் சுயாட்சி சுயநிர்ணய உரிமைகளை வெகுவாகப் பாதிக்குமென நாம் கருதுவதால் கீழ்க்காணும் விண்ணப்பத்தை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க எங்கள் சங்கம் விரும்புகிறதென்ற குறிப்புடன் பல்கலைக்கழகச் சீரமைப்புப் பற்றி வடமாகாண கல்லூரி அதிபர்கள் சங்கம் அரசாங்கத்துக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளது.

அதில் சங்கம் கூறியிருப்பதாவது:-

1. பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்தில் அவசிய திருத்தஞ் செய்யவேண்டிய குறைகுற்றங்கள் உள்ளன என்பதற்கு மறுப்புக்கிடையாது. இதுவரை காலமும் ஆட்சியிலிருந்துவந்த அரசாங்கங்கள், இந்தக் குறைகுற்றங்களை விசாரித்து நிவர்த்தி வழிவகைகள் கூறுவதற்கு என நியமித்த விசாரணைக் கமிஷன் கூறிய யோசனைகளை ஏற்றுக் கைக்கொண்டிருந்தால் பல்கலைக்கழகங்கள் சமீப காலத்தில் உள்ளாக வேண்டியிருந்த சோதனைகளும் கிளர்ச்சிகளும் தவிர்க்கப்பட்டிருக்கும்.

2. இன்றுள்ள பல்கலைக்கழக அமைப்புக்கான அதிகார மன்றம், சபை, மேல்சபை என்பட்டவையெல்லாம் எங்கள் அரசாட்சி அமைப்புப் போல பிரித்தானிய வழி முறையில் தோற்றுவிக்கப்பட்டவை. இவை காலத்தின் சோதனைகளையெல்லாம் தாண்டி நிலை பெற்றிருக்கின்றன சில அரசாங்கங்களின் சித்தியின்மை காரணமாக, யாரும் நடைமுறையிலிருந்துவரும் இந்த அரசியல் அமைப்புகளில் கை வைப்பது பற்றி எவ்வித யோசனையும் கூருமலே இருந்துவிட்டார்கள். இதனுல்தான் பல்கலைக்கழக நிர்வாக அமைப்பில் கைவைக்கும் யோசனை இப்பொழுது மட்டும் எப்படிவந்தது என்பதையிட்டு நாம் ஆச்சரியப்படுவதுடன் இதுவிஷயம் குறித்து ஒன்றும் புரிந்துகொள்ளமாட்டாமலும் இருக்கிருேம்.

உத்தேசிக்கப்பட்டுள்ள சீரமைப்பு மாறுதல்கள் அமெரிக்க முறையைத் தழுவி அதன் அடிப்படையில் கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. பல்கலைக்கழகங்கள் மீது அமெரிக்காவில் இருந்துவரும் கட்டுப்பாடுகள் பலவகைப்பட்டதாக உள்ளன

அங்கெல்லாம் உயர்நிலைக் கல்வி ஸ்தாபனங்கள்பெரும்பகுதியும் சுயாட்சி சுயபரிபாலன உரிமைகளைப் பெருமளவில் பெற்றிருக்கின்றன பொதுக் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் தனிப்பட இயங்கும் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் அங்கு பெற்றிருக்கும் இவ்வித சுயநிர்ணய உரிமைப்பேருனது அமைப்பு முறை, மேல் நிர்வாகப், நிதி உதவி என்பன போன்றவற்றில் இவைகளை ஒன்றுக்கொன்று பெருமளவு வெவ்வேறுபட்டதாக்கி வைத்திருக்கிறது. இதற்கு ஆதாரமும் எடுத்துக்காட்டுகிருேம்.

ஆனுல் இங்கு மந்திரிசபையின் ஆலோசனையில் இருந்துவரும் உத்தேசங்களைப்பார்க்குமிடத்து அவை அமெரிக்காவில் மிக அரிதாகவுள்ள ஒருவகை அமைப்பு முறையைத் தழுவியிருப்பது தெரிகிறது. சர்வதேசப் புகழ் பெற்ற ஹார்வாட், பொஸ்டன், பிரிமஸ்டன், யால போன்ற அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் யாவும் தனிப்பட்ட நிர்வாகத்தில் நடைபெற்றுவருவன. உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திட்டத்தின்படி இல்லையெ

லுள்ள பல்கலைக்கழகங்கள் முழுவதும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுவதுடன் அவற்றுக்காக மற்ருெரு கல்வி அமைச்சும் தோற்றுவிக்கப் படவேண்டியிருக்கும்.

பல்கலைக்கழகங்களுக்குச் சுயபரிபாலனஉரிமைவழங்க மறுப்பதனுல் எழக்கூடிய பாரதூரமான விளைவு பலாபலன்கள் குறித்துத் தென்னுபிரிக்காவில் சேர் எரிக் ஆஷ்பி ஒரு சமயம் தமது சொற்பொழிவொன்றில்வன்மையாகக் கூறியதை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிருேம்.

சேர் எரிக் சொல்லுகிருர்: பல்கலைக் கழகங்களுக்குரிய சுய நிர்ணய உரிமை சலுகைகளை அபகரிக்கும் ஒரு தேச சமுதாயம் மெதுமெதுவாக அதன் விவேக அறிவாற்றல் குன்றி கலாசாரப் பொலிவு நலிவடைந்து போகிறது. ஸ்பெயினில் சம்பவித்தது இதே கதைதான். அதனுல்தான் அந்த நாடு இன்று விவேக அறிவாற்றல் குன்றிப் போய் நிற்கிறது.

சலமங்கா அதிபர், மிகுவெல்டி யுனுமுனே போன்றவர்களின் எதிர்ப்பையும் மதியாது ஸ்பானிய அரசாங்கம் அதன் பல்கலைக்கழகங்களுக்கு சுயபரிபாலன உரிமை தர மறுத்துவிட்டது. உரிமை சலுகைகள் அபகரிக்கப்பட்ட நிலையில் பல்கலைக்கழகங்கள் தம்மைத் தாமே வஞ்சித்துக் கொள்வதுடன் தம் நாட்டையும் காட்டிக் கொடுத்துவிடுகின்றன. பொன் பல்கலைக் கழகத்துக்கு 1937-ல் நேர்ந்தது இதுதான். தொமஸ்மேன் என்பருக்குரிய கல்வி மதிப்பை இது பகிரங்கமாக அபகரித்தது. நாஸி ஆட்சியின் கெடுபிடிக்கிணங்கி சரித்திரம்உயிரினசாஸ்திரபாடங்களில் ஜெர்மனி பல்கலைக் கழகங்கள் தேவடியாள் ஆட்டம் ஆடிய காலம் அது. இப்படியெல்லாம் ஜெர்மனி நாட்டு கல்விமான்களின் மனச்சாட்சியையே நாஸி ஆட்சி நசுக்கியது. முடிவில் ஜெர்மனியின் வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாயிற்று.

இலங்கைப் பல்கலைக் கழகங்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளில் பெருமளவு 'இடநெருக்கடி' மீது எழுந்தவை. மாணவர்களுக்கு இடமில்லை. இந்தப் பிரச்சினை அரசாங்கம் பல்கலைக்கழகத்தில் மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில் தலையிட்ட காலம் முதலாகத் தோன்றிய ஒன்று. பேராதனை இடநெருக்கடி ஆண்டு தோறும் வளர்ந்து கொண்டே வந்து 1965 ஒக்டோபரில் உச்சநிலை அடைந்தது. இதன் பலனுக இப் பிரச்சினையில் ஒரு பங்கு கொழும்புக்கு நகர்த்தப்பட்டது. கிரான்ஸ்டாண்டில் நடைபெறும் கலைக் கல்வி வகுப்புகள் இதன் பலன்தான். பல்கலைக் கழகக் கல்வியை ஒருவழிப்படுத்துவதற்காக கூறப்பட்ட சிபார்சுகளை நடைமுறைக்குக் கொண்டுவந்திருந்தால் இன்றைய மோசமான நிலையே எழுந்திருக்காது.

((6-ம் பக்கம் பார்க்க)

### நாடும் நடப்பும்

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி அரசாங்கம் வெற்றியீட்டியுள்ளதும் ரொடீஷியா சம்பந்தமாக வில்சனின் அரசாங்கம் கடைப்பிடித்துவரும் கொள்கைக்குக் கிடைத்த அங்கீகாரம் என்றுகொள்ளலாம். ஆபிரிக்க நாடான ரொடீஷியாவில் போய்க் குடியேறிய வெள்ளையர், அந்நாட்டு ஆபிரிக்க மக்களை அடிமைகளாகவே வைத்திருப்பதற்காக, தாங்களே சுதந்திரப்பிரகடனம்செய்து சிறுபான்மையினரின் அரசாங்கம் அமைத்துள்ளனர். இதை ரொடீஷிய ஆபிரிக்க சுதேசிகள் மட்டுமல்ல, அகில உலகமும் கண்டித்தது. ஆனுல் ஆபிரிக்க நாடுகளுக்குள்ளேயே ரொடீஷிய வெள்ளையர் அரசாங்கத்தை எப்படி எதிர்ப்பதென்பதில் கருத்துவேற்றுமை. இதன் விளைவுகளில் ஒன்றுதான் நைஜீரியப் பிரதமர் சேர் அபூபக்கர் தவாபா பலேவா படுகொலைசெய்யப்பட்டதும். புரட்சியேற்பட்டதும். ரொடீஷியாவில் ஸ்மித் ஆட்சியின் மீது படைபலம் உபயோகிக்கவேண்டும் என்று பல நாடுகளும், பலரும் வற்புறுத்தினர்.

படைபலம் உபயோகித்திருந்தால் இத்தேர்தலில் தொழிற்கட்சி வெற்றிபெற்றிருக்குமா?

ரொடீஷியாவில் ஒருதலைப் பட்சமான சுதந்திரப் பிரகடனம் செய்துள்ள ஸ்மித் ஆட்சியினரும் அங்குள்ள வெள்ளையரும் பிரிட்டிஷ் பரம்பரையினர். அவர்களது உறவினர் இன்னும் பிரட்டனில் வாழ்கின்றனர். ரொடீஷிய வெள்ளையர்மீது படைபலத்தை உபயோகித்தால் அவர்களின் உறவினர்களான பிரிட்டிஷ் வாக்காளர் பலர் அதை ஆதரித்து வாக்களிப்பார்களா?

ஃ ஃ ஃ

ஆனுல் அல்ஜீரியாவில் குடியேறிய ஐரோப்பியர் விஷயத்தில் பிரஞ்சு அதிபர் டிகோல் காட்டிய துணிச்சல், அவரை ஜனதிபதி தேர்தலில் சிறிது பாதித்தாலும் ஆட்சியிலிருந்து நீக்கவில்லை. இதற்கு டிகோல் வேறு விஷயங்களில் காட்டும் உறுதிதான் காரணம் என்று சொல்லலாம்!

பிரிட்டிஷ் தேர்தலில் கன்ஸர்வேடிவ்கட்சி, தொழிற் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும்தான் முன்னணியில் நிற்கின்றன. லிபரல் கட்சிக்கு ஒருசில ஸ்தானங்கள் தான் கிடைத்திருக்கின்றன. இதுஜனநாயகம் நிலைபெறுவதற்கு இரண்டு கட்சிகள் இருந்தால் போதும் என்ற பிரிட்டிஷ்மக்களின்கருத்தை வெளிப்படுத்துகிறது.

நம்நாட்டைப் பொறுத்தவரையில் கட்சிகள் கொஞ்சமல்ல தேர்தல் நெருங்கிவிட்டதால் மழைக்கு முளைக்கும்காளான்கள் போல ஆளுக்கொரு கட்சியும் நாளுக்கொரு தலைவரும் தோன்றுவர்! எத்தனை கட்சிகள் தோன்றினுலும் ஸ்திரமான அரசாங்கமும் வலுவான எதிர்க்கட்சியும் இருப்பதற்குவழிவகுக்கவேண்டிய பொறுப்பு பொதுமக்களாகிய வாக்காளர்களுடையது. பிரிட்டிஷ்மக்கள் வழிகாட்டியிருப்பதை நாமும் பின்பற்றினுல் பல பிரச்னைகள் நீங்கும்.

ஃ ஃ ஃ

தெதுருஓயா நதிக் கரையில் இளம்பெண்ணின் தலையில்லாமுண்டம புதைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்ட பின்பும் தலையும் கிடைக்கவில்லை; கொலையின் மர்மமும் துலங்கவில்லை. ஆனுல் இறந்தபெண் தனது சகோதரியாகத் தானிருப்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி பெற்றது

## வில்சனுக்கு 21000 அதிகவாக்குகள்!

## எதிர்க்கட்சித்தலைவர் ஹீத் வெற்றி

### பல கன்சர்வேட்டிவ் ஸ்தானங்களை தொழிற்கட்சி பிடித்தது

### உதவிப்பிரதமர் பிரௌன், வாக்கர், ஸ்டுவர்ட் வென்றனர்

லண்டன், ஏப். 1

பிரிட்டிஷ்பொதுத் தேர்தலில் பிரதம மந்திரி திரு. ஹரோல்ட் வில்சனின் தொழிற்கட்சி பெருமளவு ஸ்தானங்களால் வெற்றிபெற்றிருக்கிறது.



இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை அறிவிக்கப்பட்ட 458 தேர்தல் முடிவுகளில் தொழிற்கட்சிக்கு 302 ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. (காமன்ஸ் சபையின் மொத்த ஸ்தானங்கள் 630-ல் இன்னும் 172 முடிவு வரவிருந்தன.

### கட்சி நிலைவரம்

கிடைத்த முடிவுகளிலிருந்து கட்சி நிலைவரம்:

| | | |
|---|---|---|
| தொழிற்கட்சி | 302 | ஸ்தானங்கள் |
| கன்சர்வேட்டிவ்கட்சி | 142 | ,, |
| லிபரல்கட்சி | 5 | ,, |
| கம்யூனிஸ்ட்கட்சி | 0 | ,, |
| இதர ஸ்தானங்கள் | 2 | ,, |

### புதிய ஸ்தானங்கள்

தொழிற்கட்சிக்கு இதுவரை 40 புதிய ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன். இவற்றில் பெரும்பாலும் கன்சர்வேட்டிவ் ஸ்தானங்களாகும்.

ஆனால் கன்சர்வேட்டிவ்கட்சி தொழிற்கட்சியின் ஒரு ஸ்தானத்தைக்கூட இதுவரை கைப்பற்றவில்லை.

லிபரல்கட்சி 1 தொழிற்கட்சியின் ஸ்தானத்தையும் 1 கன்சர்வேட்டிவ் ஸ்தானத்தையும் கைப்பற்றியிருக்கிறது.

### வில்சன் அமோக வெற்றி

பிரதமமந்திரி திரு. வில்சன் தனது லங்காஷயர் தொகுதியிலிருந்து 20980 அதிகப்படி வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்ற தேர்தலில் இங்கு அவருக்குக் கிடைத்ததைவிட 1000 அதிகப்படி வாக்குகள் இம்முறை அவருக்குக் கிடைத்திருக்கின்றன.

எதிர்கட்சி (கன்சர்வேட்டிவ்) தலைவர் திரு. எட்வர்ட் ஹீத் தனது கென்ட் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் இம்முறை அவருக்குக் கிடைத்த மெஜாரிட்டி சென்ற தடவையைவிடக்குறைந்துவிட்டது.

### கோர்டன் வாக்கர் வெற்றி

சென்றமுறை லேட்டன் தொகுதியில் தோல்வியுற்ற முன்னாள் பிரிட்டிஷ் வெளிவிவகாரமந்திரி திரு. பெட்ரிக் கோர்டன்வாக்கர் இம்முறை வெற்றிபெற்றார்.

### பிரபல வெற்றிகளும் தோல்விகளும்

இதுவரை வெற்றிபெற்றுள்ள தொழிற்கட்சியின் முக்கிய தலைவர்கள், உதவிப்பிரதமர் ஜார்ஜ் பிரௌன் வெளிமந்திரி ஸ்டுவர்ட், மந்திரிகள்: கஸின்ஸ், பார்பரா காஸில், டக்ளஸ் ஜே ஆகியோர். திரு. கிரீன்வுட், திரு. ஹீலி, கிறிஸ்டோபர் மேஹியூ ஆகிய தொழிற்கட்சியினரும் வெற்றிபெற்றனர்.

திரு. மெக்ளியோட், திரு. எரிக்ஹாக் ஆகிய கன்சர்வேட்டிவ் முக்கியஸ்தர்களும் வெற்றிபெற்றிருக்கிறார்கள்.

பிரபல கன்சர்வேட்டிவ்களான திரு ஜூலியன் அமெரி (ஸ்மித் ஆட்சியை தீவிரமாக ஆதரிப்பவர்), ஹென்ரி புரூக் ஆகியோர் தோல்வியடைந்தனர்.

பிரபல லிபரல் தலைவர் எரிக்லவட் வெற்றிபெற்றார்.

கடந்த 17 மாதங்களுக்குமுன் வெற்றிபெற்ற தொழிற்கட்சி இதுவரை 3 அதிகப்படி வாக்குகளாலேயே அரசாங்கத்தை நடத்திவந்தது. இம்முறை சுமார் 100 அதிகப்படி ஸ்தானங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

### கன்சர்வேட்டிவ் தோல்வியை ஏற்றது

கன்சர்வேட்டிவ் கட்சி தனது தோல்வியை ஒப்புக்கொண்டுவிட்டதாக ஏற்கனவே அறிவித்துவிட்டது.

## இந்திய சபாநாயகர்

புதுடில்லி, ஏப். 1

லோகசபை சபாநாயகர் திரு. ஹுக்கும்சிங் நேற்று எதிர்க்கட்சித் தலைவர்களுடன் 2 1/2 மணி நேரம் ஆலோசனை நடத்தினார். பார்லிமெண்ட் கூட்டம் சம்பந்தமாக அவர்கள் கூறிய சில யோசனைகளைப் பரிசீலிக்கப்போவதாய் அவர் கூறினார்.

## அமெரிக்க ரயில் வேலைநிறுத்தம்

வாஷிங்டன், ஏப். 1

அமெரிக்காவின் 38 ராஜ்யங்களில் ரயில்வே ஊழியர் வேலைநிறுத்தம் செய்ததாய், ரயில் சேவைகள் ஸ்தம்பித்தது. யூனியன் தலைவரை பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி ஜோன்[illegible] த்திருக்கிறார்.

## மீண்டும் கைதாயினர்

ஆக்ரா, ஏப். 1

காவலில் விடுதலைசெய்யப்பட்ட முன்னாள் வெளிநாட்டு மந்திரி திரு. ஸாக்கி உட்பட மூன்று மந்திரிகள், மீண்டும் காவலில் வைக்கப்பட்டார்கள். அவர்களின் சொந்தப்பாதுகாப்பை முன்னிட்டே அவர்கள் காவலில் வைக்கப்பட்டதாய்க் கூறப்பட்டது.

## மாஸ்கோ மகாநாடு

மாஸ்கோ, ஏப். 1

மாஸ்கோவில் நடைபெறும் 23-வது சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி மகாநாட்டில் பல கிழக்கு ஐரோப்பிய தலைவர்கள் சீனு பற்றிக் கண்டனம் தெரிவித்தார்கள்.

வியட்னும் விஷயமாக ரஷ்யா கடைப்பிடிக்கும் போக்குக்கு அவர்கள் ஆதரவளித்தார்கள்.

பிரிட்டனில்

## தற்கொலை அதிகரிப்பு

லண்டன், ஏப். 1

ஷெபீல்ட் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. ஸ்டென்ஜெல், பிரிட்டனில் தற்கொலை செய்து கொள்வோர் தொகை அதிகரித்து வருவதாகவும் வருடமொன்றுக்கு சுமார் 6000 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனரென்றும் இத்தொகையிலும் பார்க்க பத்து மடங்கு பேர் தற்கொலை செய்ய முயற்சிப்பதாகவும் தெரி த்துள்ளார்.

## ரூ. 100-க்கு குறைந்த ஊழியர் இல்லை

திருவனந்தபுரம், ஏப். 1

கேரளத்தில் உள்ள 45000 அரசாங்க ஊழியர்களும் அதிகச்சம்பளம் பெறவிருக்கிறார்கள். ஆகக் குறைந்த அரசாங்க ஊழியரின் சம்பளம் 100 ரூபாயாக இருக்கும் என்றும், அதிகாரிகளின் சம்பளம் ரூ. 1700 ஆக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## சைகோனில் வெடிவிபத்து

### ஐவர் பலி

சைகோன், ஏப். 1

தென்வியட்னும் தலைநகரி சைகோனில் வியட்காங்கியரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வெடி விபத்தில் ஐவர் கொல்லப்பட்டனர். இவர்களில் மூவர் அமெரிக்கர். 80-க்கு அதிகமானோர் காயமடைந்தனர்.

## ரஷ்ய ராக்கெட்

மாஸ்கோ, ஏப். 1

ரஷ்யா சந்திரனைச் சுற்றி ஓடும் புதிய ராக்கெட் ஒன்றை அனுப்பியிருக்கிறது.

இந்தோனேஷியா

## டாக்டர் சுபந்திரியோ மீது விசாரணை நடக்கும்

### ஜெனரல் சுகர்ட்டோ அறிவிப்பு

ஜாகர்த்தா, ஏப். 1

அரசாங்க இலாகாக்களிலுள்ள எல்லா இடதுசாரிக் கம்யூனிஸ்டுக்களையும் ஒழித்துக்கட்டுமாறு ஜனாதிபதி சுகர்னே உத்தரவிட்டிருப்பதாய் ஜாகர்த்தா ரேடியோ அறிவித்தது.

இந்த உத்தரவில் ஜெனரல் சுகர்ட்டோ கையெழுத்திட்டிருக்கிறார்.

இதற்கிடையில் நேற்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் மீண்டும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். புதிய மந்திரி சபையை எதிர்த்தும், ஜெனரல் சுகர்ட்டோவுக்கு ஆதரவு தெரிவித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தற்பொழுது காவலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ உட்பட 15 கம்யூனிஸ்ட் ஆதரவு மந்திரிகள் மீது விசாரணை நடத்தப்படவிருப்பதாக ஜெனரல் சுகர்ட்டோ தெரிவித்தார்.

இந்தோனேஷியாவில் நீண்டகாலம் வசித்த 100 சீனர்கள் தாயகம் புறப்பட்டனர். நிர்ப்பந்தத்தின்மீது தாங்கள் வெளியேறியதாய் அவர்கள் ஹாங்காங்கில்நிருபர்களிடம் தெரிவித்தனர்.

இதற்கிடையில் பீகிங்கில் உள்ள இந்தோனேஷியத் தூதர் ஆலோசனைக்காக அழைக்கப்பட்டும், அவர் வர மறுத்துவிட்டதாய்க் கூறப்படுகிறது.

## ஸ்ரீமதிகாந்தி லண்டன் மாஸ்கோ புறப்பாடு

### அதற்குமுன் ஐ. நா. விஜயம்

நியுயோர்க், ஏப்ரல் 1

ஐ நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் இன்று ஸ்ரீமதி இந்திரா காந்திக்குப் பகல் விருந்தளித்தார்.

அதன்பின் இரவு அவர் லண்டன் புறப்பட்டார். லண்டனில் 7 மணி நேரம் தங்கும் ஸ்ரீமதி காந்திக்கு விமான நிலையத்துக்கருகே உள்ள ஹோட்டலில் பிரிட்டிஷ் பிரதமர் விருந்தளிக்கிறார்.

பிரதமர் வில்சனுடன் பேச்சு நடத்தியபின், ஸ்ரீமதி காந்தி விசேஷ விமான மூலம் நாளை மாஸ்கோபுறப்படுவார்.

அங்கு ரஷ்யப் பிரதமருடன்பேச்சுநடத்துவார்.

ஸ்ரீமதி காந்திக்கு நியுயோர்க்கில் நேற்று நிறைய அலுவல்கள் இருந்ததாயினும், ஏராளமானோர் அவரைப் பார்க்க வந்ததினாலும் இந்தியத் தூதர் திரு மேத்தா அளிக்கவிருந்த விருந்து த்துச்செய்யப்பட்டது.

காலஞ்சென்ற திரு. நேரு அமெரிக்கதேசிய ஒலிபரப்பு ஸ்தாபனத்திற்கு அளித்த பேட்டியைக் கொண்ட ஒலிப்பதிவு நேற்று ஸ்ரீமது காந்திக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

ஐ. நா. விலுள்ள ஆசிய—ஆபிரிக்க குழுவை ஸ்ரீமதி காந்தி சந்தித்தார்.

நியுயோர்க் கவர்னர் திரு. நெல்சன் ராக்பெல்லர், திரு செஸ்டர்பவுல்ஸ் ஆகியோர் ஸ்ரீமதி காந்தியைச் சந்தித்தனர்.

## விஞ்ஞானப் பொருட்காட்சி

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி விஞ்ஞான வகுப்பு மாணவர்கள் பெற்றார்தின விழாவன்று பகலில் ஒரு விஞ்ஞானப் பொருட்காட்சியை நடத்தினார்கள். உயிரியல், இரசாயனவியல், பௌதிகம் ஆகியவற்றின் கண்காட்சிகளை முறையே ஆசிரியர்கள் திருவாளர்கள் கே. செல்வநாயகம், க. சண்முகசுந்தரம், ஆர். பொன்னம்பலம் ஆகியோர் தயாரித்தனர். வேறு கல்லூரிகளிலுமிருந்து மாணவர்கள் வந்து இப்பொருட்காட்சியைப் பார்வையிட்டனர்.

## ஆபிரிக்க உச்சிமகாநாடு

நைரோபி, ஏப். 1

11 ஆபிரிக்க நாடுகளின் உச்சிமகாநாடு நைரோபியில் ஆரம்பமாக இருக்கிறது.

## சீனத் தலைவர்கள் திரும்பினர்

ராவல்பிண்டி, ஏப். 1

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்த சீனத் தலைவர்கள் லியூஷாசீயும், மார்ஷல் சென்யீயும் தாயகம் திரும்பும் வழியில் நேற்று சிக்கியாங் சேர்ந்தனர்.

## மலாய், சிங்கை கூட்டு பாதுகாப்பு

கோலாலம்பூர், ஏப். 1

மலேஸியாவும், சிங்கப்பூரும் பிரிட்டிஷ் ஆதரவுடன் புதிய பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று பற்றி ஆலோசித்துவருவதாய் அறிவிக்கப்பட்டது.

## மால்டா தேர்தல்

லண்டன், ஏப், 1

மால்டா பொதுத் தேர்தலில் வலதுசாரி தேசிய கட்சி வெற்றி பெற்றிருக்கிறது.

கரவெட்டி பகுதிக்கு

## குழாய்நீர் விநியோகம்

### விரைவில் கொடுக்கப்படும்

பருத்தித்துறை, வெள்ளி

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் எடுத்துக்கொண்ட முயற்சிகளைத் தொடர்ந்து கரவெட்டிப் பகுதிக்கான அத்துளுகுழாய் நீர் திட்டத்துக்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமெனத் தெரியவருகிறது

இத்திட்ட வேலைகள் சுமார் நாலு இலட்சரூபாய் செலவில் நடைபெறும்எனக் கூறப்படுகிறது.

இத்திட்ட வேலை பூர்த்தியடையும் பட்சத்தில் கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மேற்குப்பகுதி மக்களது குடிநீர்ப் பிரச்னை பெருமளவில் தீர்க்கப்படுமென நம்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் இலாகா

# நேர்முகப் பரீட்சைகள் ரத்து

## அரசியல் தலையீடுதான் காரணமாம்!

கொழும்பு, வெள்ளி

அரசியல் தலையீடு காரணங்களுக்காக பொலிஸ் இலாகாவில் இவ்வாரம் நடைபெறவிருந்த பல பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

உதவி இன்ஸ்பெக்டர் பதவிக்கு நேர்முகப் பரீட்சைக்காக வந்திருந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது இவர்களின் பூர்வாங்க இறுதி நேர்முகப் பரீட்சையாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பிற உயர்தர உதவி பொலிஸ் சுப்பிரின்டன் உட்பட்ட பல பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகளும் இவ்வாறன அரசியல் தலையீடு காரணமாகரத்துச்செய்யப்பட்டுள்ளது. இவ்வகையிலான நியமனங்களுக்கு எவ்வித அரசியல் சக்திகளின் செல்வாக்கும் இருக்கக்கூடாதென தேசிய அரசாங்கம் தனது கொள்கையைஏற்கனவே வரையறை செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

விசாரணையின்பின் இறுதி நேர்முகபரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் அரசியல் சக்திகளின் செல்வாக்கு இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதெனத் தெரியவந்துள்ளது.

# வருமானவரி பத்திரங்கள் தயாரிப்பதில் தாமதம்

கொழும்பு, வெள்ளி

1966—1967-ம் ஆண்டிற்கு வருமானவரி பெறுவதற்கான பத்திரங்கள் வருமான வரிப்பகுதி இலாகாவினால் இன்னும் தயார் செய்யப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக வருமான வரிப் பத்திரங்கள் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் பொதுமக்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

வருமானவரிப்பத்திரங்களைப் பெற்றவர்கள் ஒரு மாதகாலத்திற்குள் பூர்த்தியாக்கி வருமானவரிஇலாவிற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். குறிப்பிட்ட தவணைக்குள் பத்திரத்தை அனுப்ப முடியாத ஒருவர் வருமான வரிப் பகுதியினர்க்கு எழுதி தவணையை நீடிப்புச்செய்துகொள்ளலாம். இவ்விதம் நடந்து கொள்ளாதவர்கள் குற்றம் செலுத்தும்படி கேட்கப்படுவர்.

# 'படித்த வாலிபர்கள் விவசாயத்திலீடுபட வேண்டும்'

துணுக்காய், வெள்ளி

''படித்த வாலிபர்களின் தொகை நாளாந்தம் கூடிக்கொண்டு வருகின்றது. வேலையற்ற வாலிபர்களின் தொகையும் அதிகரித்து வருகின்றது. தங்கள் பிள்ளைகள் படித்துப் பட்டம் பெற்று அரசாங்க உத்தியோகம் பார்க்க வேண்டும் என எண்ணும் பெற்றோர்கள் பலர். ஆனால் அரசாங்கம் படித்த அனைவருக்கும் உத்தியோகம் கொடுக்க முடியாத நிலைமையில் உள்ளது. இதனால் தான் வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்களும் காணிப் பகுதியின் மேலதிகாரிகளும் ஒன்று சேர்ந்து இலங்கையிலே உள்ள குடியேற்றத் திட்டங்களில் முன்மாதிரியான முறையில் விசுவமடு குடியேற்றத் திட்டத்தை அமைத்துள்ளார்கள். இதில் பல கட்டுப் பாடுகள் இருப்பினும் இரண்டு வருடங்களில் உங்கள்கஷ்டங்கள் நீங்கும்''

இவ்வாறு துணுக்காய்ப் பிரிவிலுள்ள படித்த வாலிபர்களுக்கான காணிக்கச்சேரி தெரிவில் கலந்து கொண்ட காணி அதிபர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை உரை நிகழ்த்துகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதா

(5-ம் பக்கம் பார்க்க)

**வெற்றி நிச்சயம்!**

ஜி. சி. ஈ. உயர்தரவகுப்புக்கான அரசியல் பூமிசாஸ்திரம் ஆகிய பாடங்களுக்கான 101 கேள்விகளும் மறுமொழிகளும் ஒவ்வொன்றும் ரூபா 8/-க்கு எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஐக்கிய கலாசாலை
நெல்லியடி, :: கரவெட்டி. D

# தள்ளாத வயதிலும் தமிழுக்காக உழைக்கிறார்

## தமிழரசுத் தலைவர் எஸ். ஜே. வி. க்கு எம். பி. க்கள் புகழ்மாலை

உடுப்பிட்டி, வெள்ளி

''1956-ம் ஆண்டில் இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் வீடுகளில் கறுப்புக் கொடிகள் பறந்த நிலைமையை மாற்றி 1966-ல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினதும் எதிர்க்கட்சியினரதும் வீடுகளில் கறுப்புக் கொடியைப் பறக்க வைத்த பெருமை தந்தை செல்வாவையே சாரும். தமது தள்ளாத வயதிலும் தமிழ்மொழிக்காகக்கச்சேரியிலும் காலிமுகத்திலும் சத்தியாக்கிரகம் இருந்த செயல்வீரர் அவர்.''

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் அல்வாய் வடக்கு தமிழரசுக் கட்சிக் கிளையினரால் கொண்டாடப்பட்ட தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ், ஜே. வி. செல்வநாயகத்தின் 68-வது பிறந்ததின விழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இன்பருட்டி கடற்கரை மைதானத்தில் திரு. ந. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

''அநுராதபுரத்தில் பௌத்த பல்கலைக்கழகம் நிறுவுவதுபோல் யாழ்ப்பாணத்தில் இந்துப்பல்கலைக்கழகம் நிறுவ யோசனை சொல்கிறார்கள். ஆனால் அநுராதபுரத்தில் நிறுவவிருக்கும் பல்கலைக்கழகத்தில் பௌத்த குருமார்கள் மாத்திரம்படிக்கலாம் என்பதை அவர்கள் உணர்வார்களா? அப்படியானால் இந்துப்பல்கலைக் கழகத்திலும் சைவக் குருமார்கள் மாத்திரமே படிக்கநேரிடும். பேராதனையில் நிலவிவரும் இடப்பிரச்னையைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்தீர்க்கவேண்டும். நாம் மாத்திரம் கூறவில்லை. 1956-ம் ஆண்டு தொடக்கம் பேராசிரியர்கள் எலியேசர், மயில்வாகனம் போன்றவர்களும் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்காக முயற்சி செய்தார்கள். நாம் சாதி சமயத்தால் பிளவுபட்டு நிற்பதற்கு இது சமயமல்ல. எங்கள் ஒற்றுமையைப்பலப்படுத்தவேண்டும். தியாக வழியை எமக்குக் காட்டிய தந்தை செல்வாவின் பாதையிலே செல்ல வேண்டும்.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம்பேசுகையில், ஆடம்பரமற்ற வகையில் நேர்மையான வழியில் வாழ்ந்துவரும் தலைவர் திரு. செல்வநாயகத்தை நாம் பெற்றெடுத்தது தமிழ் மக்கள் செய்த தவப்பயன் என்றுதான் கூறவேண்டும் என்றும் எதிரியையும் பண்புகாட்டி வரவேற்கும் இனிய பண்பு[illegible]அவருடையதென்றும் தமது தள்ளாத வயதிலும் தமிழுக்காக உழைக்கிறார் என்றும், அவர் பன்னெடுங்காலம் வாழ்ந்து தமிழ் மக்களுக்கு விமோசனமளிக்கப் பாடுபடவேண்டுமென்றும் சொன்னார்.

உடுப்பிட்டித் தமிழரசுக் கட்சிக் கிளைத் தலைவர் அட்வக்கேட் திரு. க. ஜெயக்கொடி பேசுகையில் தந்தை செல்வாவின்[illegible] அஹிம்சை வழியே எமக்கு வாழ்வளிக்கும் என்று கூறினார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் புரக்டர்திரு. வேலும்மயிலும், திரு. நவரத்தினம், செல்வன் ஆ. பஞ்சலிங்கம், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் பேசினர்.




## கொழும்பு

சனி 2.-4-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 அதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 இசை மெட்டு.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வயலின், 7-15 செய்திச்சுருள் 7-30 குங்குமம்—மாதர்நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உரைச் சித்திரம், 9-45 எங்கள் விருப்பம், 10-00 நேயர்விருப்பம்.

வியாபாரம் பெருக
விளம்பரம்செய்க

**7 ரு. நிறையுள்ள கண்ணான கண்ணன்**



**அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வான்**




ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாறாத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும், விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.

துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் குழந்தைகள் பெலனான சுக வளர்ச்சி பெறுகிறார்கள்.

**ஒஸ்டர்மில்க்**

கிளக்ஸோ-அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23. கொழும்பு.

ஒஸ்டர்மில்க் குழந்தைப் புத்தகம் ஒன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள கீழ்கண்ட விலாசத்திற்கு 10 சத முத்திரை அனுப்பவும்

பகுதி 25 கிளக்ஸோ-அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23. கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
யாழ்ப்பாணக் கச்சேரி

என் 641 கனகபுரம் டித்த காலி பர் திட்டத்தின் கீழ் உள்ள உள்ரோட்டு களை திருத்துதல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 26-4-66

சுகாதாரப் பகுதி

என் 647-1965-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் பொது அரசினர் வைத்தியசாலையின் முதலாம் ஐந்தாம் பிரிவின் அழுக்குத் துணிகளை சலவை செய்தல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 29-4-66.

நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 705- யாழ்ப்பாண உப-பிரிவிலுள்ள முறிகண்டியிலிருந்து அக்கராயன் குளம் 3-ம் கட்டையிலிருந்து 6-ம் கட்டைவரைக்கும் கல்லுப் போட்டுத் தார் ஊற்றுவதற்கும், அதோடு இரணைமடு திட்டத்திலுள்ள கெனடி வீதிக்கும் கல்லுப்போட்டுத் தார் ஊற்றுதல்.

இதன் முழு விபரங்களுக்கும் 1-4-66 இல் வெளியான அரசாங்க வர்த்தகமானியின் 1-ம் பகுதி, 11-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகலகச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 2195

# கேள்வி விளம்பரம்

1. செம்பியன்பற்று கிராமசபைத் தலைவரால் 18-4-66-ம் திகதி காலை 10 மணிவரை வேம்படிரோட்டு (விடிவெள்ளி வீதி) வேலைக்கான கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விகள் 17-4-66-ம் திகதி காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரையும், ரூபா 25/- கேள்விப்பிணையும், ரூபா 5/- கேள்விப் பத்திர கிரயமும் செலுத்துவதன் பேரில் கொடுக்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் அனுப்பப்படவேண்டும் கேள்விப்பத்திர கிரயம் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது.

3. மற்றும் விபரங்கள் சபையின் அலுவலகத்திலும் வடபிரதேசம் (மேல்) உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

ஐ. ஆ. ஐயம்பிள்ளை,
தலைவர்
செம்பியன்பற்றுகிராமசபை

கி. ச. அலுவலகம்,
செம்பியன்பற்று,
31-3-1966. 101


கொழும்பு

## றோயல் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டி
## இம்மாதம் 5, 6ல் யாழ்ப்பாணம் வருகிறது

யாழ்ப்பாணம், சனி

கொழும்பு றோயல்கல்லூரி கிரிக்கெட் கோஷ்டி இம்மாதம் 5-ம், 6-ம் தேதிகளில் யாழ். மத்தியகல்லூரி விளையாட்டரங்கில் யாழ். மத்திய கல்லூரியுடன் மோதிக் கொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கோஷ்டியினர் இம்மாதம் 8- , 9-ம் தேதிகளில் யாழ்ப்பாணம் வருவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது சரியானதல்ல.

## புதிய சமாதான நீதவான்

திருகோணமலை, வெள்ளி

சாம்பல்தீவு கிராமசபைத் தலைவர் திரு. இ. தங்கராசா, திருகோணமலை மாவட்ட நீதிபதி முன்னிலையில் சமாதான நீதவானுக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.


## விசேஷ வகுப்புகள்

ஆசிரிய பயிற்சி ஆங்கிலம்/விஞ்ஞானம்/வர்த்தகம், புகையிரத 'கார்டு' கள், தபாலதிபர்கள் 'சிக்னலர்கள்', சுகாதார உதவியாளர்கள் மற்றும் பல்வேறு அரசாங்க பரீட்சைகளுக்குமான விசேஷ வகுப்புகள் எங்களால் நடத்தப்படுகின்றன. பெண்களுக்குத் தனியான விடுதி வசதிகளுண்டு.

ஐக்கிய கலாசாலை
நெல்லியடி, :: கரவெட்டி.
107, பருத்தித்துறைவீதி
நல்லூர், யாழ்ப்பாணம் B

REGAL—JAFFNA
NOW SHOWING!
PRIZE WINNER AT
FRENCH FILM FESTIVAL!
THE SKY ABOVE
THF MUD BELOW
(in Color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ ஆர். - விஜயகுமாரி
நடித்த
பூம்புகார்

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
நீதிக்குப் பின் பாசம்
கலரி 50 சதம்.
4-45க்கு மட்டும்
The Dark Eyes of London

இப்பொழுது நடைபெறுகிறது!
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
சபையர் (வெள்ளவத்தை)
விஜிதா (அட்டன்)
விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை)
மொடேர்ன் (பதுளை)
முத்துராமன், மனோகர்,
சந்திரகாந்தா, ராஜ்ஸ்ரீ,
பேபி ஷகிலா
நடிக்கும்
மொடேர்ன் தியேட்டர்ஸின்
அம்மா எங்கே?
விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு)
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
கடைசி வாரம்
சர்வர் சுந்தரம்


## "பிற்லஸ் லெவன்" வெற்றி

யாழ்ப்பாணம், சனி

"பிற்லஸ் லெவன்" கிரிக்கெட் கோஷ்டிக்கும், "சென். ஜோக்" கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் பிற்லஸ் லெவன் வெற்றி பெற்றது.

சென். ஜோக் இரு ஆட்டங்களிலும் முறையே 29, 23 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பிற்லஸ் லெவன் முதல் ஆட்டத்தில் மொத்தம் 33 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் எதுவித விக்கெட் நஷ்டமுமின்றி 22 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை முடித்துக் கொண்டது. ஆட்ட முடிவில் பிற்லஸ் லெவன் கோஷ்டி சென். ஜோக் கோஷ்டியை 10 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.

சென். ஜோக் கோஷ்டிக்கு வின்ஸலோகம், பிற்லஸ் லெவன் கோஷ்டிக்கு பவுலீசும் தலைமை தாங்கினார்கள்.

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ். மென்பந்து கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் 1966-ம் வருடத்துக்கான சுற்றுப்போட்டி இம்மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கிறது.

இம்முறைக்கான போட்டியில் வடமாகாணத்திலுள்ள சகல மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுக் கோஷ்டிகள் பங்குகொள்வதற்கான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுச் சங்கத் தலைவர் திரு. எம். ஏ. தியாகராஜா அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், சனி

மயிலிட்டி கிராமசபை ஆயுர்வேத வைத்தியசாலையை நாளை மாலை வடபகுதி ஸ்தலஸ்தாபன உதவி ஆணையாளர் திரு. சி. எஸ். மாணிக்கவாசகர் திறந்து வைப்பார். கோப்பாய் எம். பி. திரு. . கதிரவேலுப்பிள்ளை தலைமைவகிப்பார். பலர் உரைநிகழ்த்துவார்.

# ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் குறைபாடுகள்

அனுராதபுரம், வெள்ளி

"பொதுமக்களின் சுகாதாரத்துக்காக உழைக்கும் ஸ்தல ஸ்தாபன மன்றங்களில் கடமையாற்றும் தொழிலாளர்கள் இன்று சில பகுதிகளில் சுகாதாரமற்ற முறையில் வசிக்கிறார்கள்' என ஐக்கிய இலங்கைஸ் தலஸ்தாபனதொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. ஆர். செல்லையா இதுசம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;—

"பெருகிவரும் ஜனத்தொகைக்கேற்ப ஸ்தல ஸ்தாபனங்களில் மக்களின் சுகாதார நலனைக் கவனிக்கத்தக்கதாக தொழிலாளர்கள் அமர்த்தப்படுவதில்லை. பத்து வருடங்களுக்கு முன் ஒரு உள்ளூராட்சி மன்றத்தில் எவ்வளவு தொழிலாளர்கள் கடமையாற்றினார்களோ அவ்வளவு தொழிலாளர்கள்தான் இன்றும் கடமையாற்றி வருகின்றார்கள்.'

இவ்வித நிலையை நீக்க ஸ்தல ஸ்தாபன மந்திரி போதிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென சங்கத்தின்சார்பில் திரு. செல்லையா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகாதாரம் சம்பந்தமாக எவ்வித நடவடிக்கை மேற்கொண்டால் நன்மையளிக்கும் என்பதை பொதுமக்களிடமிருந்து அறிவதற்காக ஒரு கமிஷன் அல்லது கமிட்டி நியமிக்கவேண்டுமென்றுப் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'கல்வி வளர்ச்சியில் பெற்ரோருக்கு அதிகபங்கு உண்டு'

உடுப்பிட்டி, வெள்ளி

"ஒரு கல்லூரியின் வளர்ச்சி அதன் மாணவர்களினதும் பெற்றோர்களினதும் கையிலேயே தங்கியிருக்கிறது எனலாம். எமது கல்லூரிக்கு அருகாமையில் மின்சார வசதிபெறக்கூடியதாக இருந்தும் எமது கல்லூரிக்குமின்சாரம்பெறமுடியாத இக்கட்டான நிலையுள்ளது. இதற்குக் காரணம் பணமின்மையேயாகும். இதனாலேயே இம்முறை பெற்றோர் தினக் கொண்டாட்டங்களை விரிவான முறையில் சிறப்பாக நடத்தவில்லை. இக்கொண்டாட்டத்திற்குச் செலவிடும் பணத்தைச் சேமித்து மின்சாரம் பெறும் நோக்கத்துடனேயே இவ்விழாவை மிகவும் எளிய முறையில் நடாத்துகின்ரோம். இதற்குப் பூரண ஆதரவுதந்து பெற்றோர்கள் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும். மாணவர்களின் கல்வி ஊக்கத்தில் பெற்ரோரின் பங்குமிக முக்கியமானது"

மேற்கண்டவாறு உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி பெற்ரோர்தினவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அதிபர் திரு. எஸ். எஸ், செல்லத்துரை கூறினர். விழா ஆரம்பமாவதற்கு முன்பு விஞ்ஞான மாணவரின் விஞ்ஞானக் கண்காட்சி நடைபெற்றது.

திருவாளர்கள் க. தர்மரத்தினம், ந. [illegible] ச. [illegible] கரசு, தி. ஜெயபாலன் ஆகியோரும் பேசினர். செல்வன் த. ஜெயராசா வாழ்த்துப் பாடல்கள் பாடினர். கல்லூரிச் சாரணர்கள் முதலுதவி பற்றி விளக்கப்பயிற்சியளித்துக் காண்பித்தனர்.

செல்வன் இ. முத்துரத்தினநந்தன் நன்றிகூறினர்.

## 'படித்த வாலிபர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வது; உண்மையான விவசாயிகளே காலம் தாழ்த்தாது கடமை புரிகின்றார்கள். ஆனல் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரும் தங்கள் மேலதிகாரிகளிற்குப் பயந்து கடமை புரிகின்றார்கள். இவைகளை நாம் உற்று நோக்கும் பொழுது உழவுத் தொழிலுக்கு நிகரில்லை என வள்ளுவர் கூறிய பொன் வாக்கை மறக்கவோ மறுக்கவோ முடியாது.

படித்தவர்கள் விவசாயம் செய்ய முன் வருவதுடன் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப் பெருக்குவதற்கும் ஊன்று கோலாக அமையவேண்டும் என்றும் அவர் கூறினர்.

இக்காணிக் கச்சேரிக்குத் துணுக்காய் பகுதியிலிருந்து அறுபதிற்கு மேற்பட்ட விண்ணப்பக்காரர்கள் சமூகம் கொடுத்திருந்தார்கள்.


# வரிவிளம்பரம்

## தேவை

விற்பனையாளர்கள்தேவை நேரில் வரவும். விநாயகம் இன்டஸ்றீஸ், 39, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்தி) யாழ்ப்பாணம். 2239

## விற்பனைக்கு

சங்குவேலி, பூவரசடி ரோட்டில் 30 1/2 பரப்பு வயல் காணி தனிக்கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நீர்ப்பாசன வசதிக்கேற்ற குளம் அருகில் உடையது. விபரங்கட்கு: திருமதி நன்னித்தம்பி, கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு. 2236

விற்பனைக்கு செம்மணி ரோட்டுக்கரையில் 25 பரப்பு வயல் இருக்கிறது. விபரத்திற்கு அப்பாக்குட்டி, 159/1 டெம்பிள் ரோட், நல்லூர். 4

சாவகச்சேரிக் தமிழ் காங்கிரஸ் கிளையின் முதல் வெளியீடு- 'எங்கள் தலைவர்' விலைசதம் 50. விபரங்களுக்கு: காரியதரிசி, தமிழ்க் காங்கிரஸ்கிளை காரியாலயம் 'குருபவனம்' சாவகச்சேரி. 5

## வாடகைக்கு

ஆனைக்கோட்டை 2 அறைகள், போட்டிக்கோ, விருந்தை, குசினி, குளிக்கும் அறை, குழிக்கக்கூசு முதலிய வசதிகள் உள்ள வீடு. மணியகாரன் R. N. சின்னையா அவர்களின் அடுத்த காணி வைரவர் கோவில்உள்ளவளவுதிருமதி வ. பொன்னுத்துரை, 'கூடல்' ஆனைக்கோட்டை. 2

## காணவில்லை

யாழ். இலங்கை வங்கி C/7 626701, C/7 626702, C/7 626704 யாழ். மெர்கண்டியல் வங்கி 880047, 880048, 880050. ஆகிய செக்குகள் தபாலில் காணுமல் போய்விட்டபடியால் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று பொது மக்களுக்கு ச் சரிக்கின்ரேம். A. வைத்திலிங்கம்- & Co. 1

## வைத்தியம்

விசர் நாய்க்கடி, நாய்க்கடி மற்றும் சகல இரணத்திற்கும் வைத்தியம் செய்யப்படும். ஆங்கில வைத்தியத்தாலும் வெறெந்த முறையாலும் மாற்ற முடியாத விசர் நாய்க்கடியை முன்னோர்களின் முறையும், தனது அனுபவ முறையுடனும் ஆயிரக்கணக்கானோருக்கு மாற்றி சுகமடையச் செய்பவர். நற்சாட்சிப்பத்திரம் பெற்றவரான வைத்தியர். நா. தம்பு, தாவடி வடக்கு, கொக்குவில். 2222


## தேர் நிகழ்ச்சி அஞ்சல்

யாழ்ப்பாணம். சனி

வண்ணை சிவன்கோவில் தேர் நிகழ்ச்சிகள் இலங்கை வானெலிப் பகுதியினரால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் 10-30 மணி தொடக்கம் 12-45 வரை அஞ்சல்செய்யப்படும்.


## விசேஷ சலுகை

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைக்கு திருப்பிப் படிப்பதற்கு உதவியாக 101 பொருத்தமான கேள்விகளும், மறுமொழிகளும் அரசியல், பூமிசாஸ்திரம் ஆகிய பாடங்களுக்கு எம்மிடம் கிடைக்கும். ஒவ்வொரு தொகுதிகளும் உகந்த விலையில் ரூபா 27/-க்குப் பெற்றுக்கொள்ளலாம். —யுனைட்டெட் இன்ஸ்ரிரியூட், நெல்லியடி, கரவெட்டி. C


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைகலப்பின் விளைவாக மூவர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம், சனி

சுளிபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு கைகலப்புச் சம்பவம் காரணமாக மூவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவரான சுளிபுரத்தைச்சேர்ந்த பஸ் கண்டக்டர் வைரமுத்து என்பவர் பலத்த காயங்களுடன் ஆபத்தான நிலையிலிருப்பதாகத் தெரிகிறது. காயமடைந்த மற்ற இருவரும் வைரமுத்துவின் தந்தையும் மைத்துனருமெனத் தெரிகிறது.

சுளிபுரத்திலுள்ள ஓர் ஆலயத்தில் நடைபெற்ற வேள்விப்பலி சம்பந்தமாக இக்கைகலப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

## உடுப்பிட்டிக்கு 7 நெசவுநிலையம்

பருத்தித்துறை, வெள்ளி

உடுப்பிட்டித் தொகுதிக்கான 7 நெசவுநிலையங்கள் முறையே கொற்றுவத்தை இமையாணன், சோழங்கன், கப்புது, புலோலி தெற்கு, கரவெட்டிமேற்கு, வதிரி ஆகிய இடங்களில் நிறுவப்படவிருக்கிறது.

நெசவுநிலையங்கள் அமைப்பதற்கான காணிகள் சொந்தக்காரர்களிடமிருந்து 20 வருட கால எல்லைக்கு பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## நாடும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மால் என்றணகத்தில் மற்றொரு இளம்பெண் ரயில்முன் பாய்ந்து மாண்டிருக்கிறாள். ஆனால் இறந்த பெண் யாரோ: தற்கொலை செய்த பெண்ணுக்கு உறவேயில்லையாம்!

இவ்வருடம் ஆரம்பித்ததிலிருந்து பல கொலைகளும் குற்றச்சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டியதுதான். ஆனால் இச்செயல்களுக்கான மூல காரணங்களை அறியவேண்டியது மிகமிக அவசியம்.

ஃ ஃ ஃ

நமது மதத்தின் பெருமையை வெளிநாடுகளில் பரப்புவதற்குப் பணம் செலுத்துவதனாலோ, மத சம்பந்தப்பட்ட தினங்களை விடுமுறை நாட்களாக்குவதாலோ நமக்குப் பெருமை கிடைக்காது. குற்றச்செயல்கள் இல்லாமல் அமைதியுடன் அனைவரும் வாழ்ந்தால்தான் பெருமை. சமயத்தலைவர்களும் மதங்களுக்கு உரிமை கோருபவர்களும் இதுபற்றிச் சிந்திப்பார்களா?

—ஊர்சுற்றி

ஆசிய

## பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் யூனியன் மகாநாடு

டோக்கியோ, ஏப்.1

ஆசிய பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் யூனியன் தனது இரண்டாவது பொதுக் கூட்டத்தை சியோலில் செப்டம்பர் மாதத்தில் நடத்தவிருக்கிறது. இம்மகாநாட்டில் பொதுவான பல பிரச்னைகள் ஆராயப்படவிருக்கின்றன.

இந்த யூனியன் சென்றவருடத்தில் உருவாக்கப்பட்டது.

## "பல்கலைக்கழக ...

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

பல்கலைக்கழக உதவி நன்கொடைகள் பற்றிய கமிஷனை இனியும் தாமதப்படுத்தாமல் நியமிக்கவேண்டியது அவசியம். கல்வித்துறையில் முக்கியஸ்தர்களாகவுள்ள மூன்று பேருக்குமேல் இக்கமிஷனில் அங்கத்துவம் வகிக்கலாகாது. அரசாங்க ஊழியர் கண்டிப்பாக கமிஷனில் இடம்பெறக் கூடாது. பல்கலைக்கழக நிர்வாகங்களில் தலையிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படு முன்பாக, இக்கமிஷனிடமே பல்கலைக்கழகங்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை மூன்று ஆண்டுகளுக்கு ஒப்படைக்க வேண்டும், இதை நாம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

பல்கலைக்கழகங்களின் உதவி நன்கொடைகள்பற்றி இந்தியாவிலுள்ள இதே வகை கமிஷன் எப்படி உபயோகமான தொன்றாக வளர்ச்சி பெற்றிருக்கிறதென்பதையும் ஒரு பக்கம் பல்கலைக்கழகங்களுக்கும் மறுபக்கம் அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் மத்தியில் ஓர் இணைப்புப் பாலமாக எப்படி அது இயங்கி வருகிறதென்பதையும் கலாநிதி அதிபர்கள் சங்கம் அதன் மகஜரில் எடுத்துக் காட்டியுள்ளது.

## தேசிய சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா 250 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் பெறும் டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 13 B 0198 | 19 C 0356 |
| 17 V 0695 | 03 N 0148 |
| 12 B 0101 | 13 H 0519 |
| 18 Q 0182 | 10 M 0893 |
| 03 H 0808 | 01 B 0991 |
| 01 P 0465 | 06 D 0854 |
| 22 R 0401 | 15 L 0703 |
| 17 R 0848 | 04 E 0887 |
| 13 W 0754 | 18 P 0252 |
| 07 J 0859 | 13 P 0808 |
| 10 K 0215 | 08 X 0720 |
| 19 B 0948 | 04 K 0248 |
| 18 Z 0756 | 18 Y 0549 |
| 14 N 0530 | 09 F 0941 |
| 02 Y 0198 | 11 X 0011 |
| 19 P 0190 | 09 Z 0570 |
| 19 G 0726 | 05 X 0560 |
| 07 V 0299 | 19 Q 0562 |
| 02 Z 0656 | 04 K 0168 |
| 11 X 0229 | 15 R 0519 |
| 05 B 0875 | 05 X 0256 |
| 14 S 0319 | 08 A 0425 |
| 21 H 0681 | 19 V 0515 |
| 03 R 0241 | 12 A 0658 |
| 05 A 0596 | 22 Z 0828 |
| 07 S 0603 | 07 T 0714 |
| 22 H 0573 | 11 E 0676 |
| 16 D 0484 | 06 S 0673 |
| 06 T 0159 | 01 S 0609 |
| 02 C 0063 | 03 J 0322 |
| 08 U 0823 | 13 O 0584 |
| 15 C 0403 | 21 G 0800 |
| 04 X 0718 | 06 W 0387 |
| 08 F 0044 | 13 A 0547 |
| 20 N 0242 | 13 V 0344 |
| 19 S 0939 | 01 E 0591 |
| 18 L 0934 | 01 L 0732 |
| 04 T 0659 | 05 F 0553 |
| 16 M 0559 | 18 O 0663 |
| 11 B 0500 | 17 U 0311 |
| 09 C 0802 | 11 K 0114 |
| 13 V 0153 | 03 N 0744 |
| 21 M 0595 | 16 V 0383 |
| 01 O 0146 | 17 H 0166 |
| 04 T 0914 | 05 A 0006 |
| 06 M 0672 | 01 J 0809 |
| 08 F 0207 | 12 J 0929 |
| 15 V 0226 | 08 J 0467 |
| 10 H 0446 | 01 G 0489 |
| 09 R 0443 | 16 H 0549 |

# இந்தியா திரும்புபவர்களுக்கு புனர் வாழ்வளிக்கும் திட்டம்

## இந்தியப் பிரதமருக்கு தொண்டமான் யோசனை

கொழும்பு, வெள்ளி

"சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படும் இலங்கை இந்தியர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான திட்டம் பற்றி இந்திய அரசாங்கம் கவனமெடுத்து வருவதாக இங்கிருந்து வெளியாகும் ஆங்கில தினசரியொன்றில் செய்தி வெளிவந்திருந்தது. இதனை நாம் வரவேற்பதுடன் அது சம்பந்தப்பட்ட சில யோசனைகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்."

இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்திக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் எம். பி. யுமான திரு. எஸ். தொண்டமான் அனுப்பியுள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

திரு. தொண்டமான் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- "இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படும் இந்தியர்களில் 75வீதத்தினர் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்தவர்களாவர். இவர்கள் இத்தொழில் நல்ல அனுபவமும் தேர்ச்சியும் பெற்றவர்களாவர். தென்னிந்தியாவைச் சேர்ந்த இவர்கள் தமது சமூக கலாச்சார பண்பாடுகளை கண்ணியமாகக் காத்துவருபவர்களாவர். இந்தியாவின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு ஏற்ற முறையில் இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கடுமையாக உழைக்கக்கூடிய இவர்கள் நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுபவர்கள் என்பதால் சிறிதும் சந்தேகமில்லை.

இங்கிருந்து வரும் இந்தியர்களுக்கு அளிக்கப்படும் புனர்வாழ்வளிக்கும் திட்டம் மேற்படி சொன்னவற்றை அடிப்படையாகவைத்து தயாரிக்கப்பட வேண்டும் அவர்களுக்குப பாதுகாப்பும் நன்மையும் அளிக்கக்கூடிய அம்சங்களே சேர்க்கப்படவேண்டும்.

கடந்த ஒன்றரை நூற்றாண்டுகாலமாக இந்தியாவுக்கு அனுப்பப்படும் இந்த இந்தியர்களுக்கு இடமாற்றம் இப்போது ஏற்பட்டுள்ளது. இனியாவது இவர்கள் குடியேறவிருக்கும் நாட்டில் சுதந்திர புருஷர்களாகவும், அந்தஸ்தும் கௌரவமும் அளிக்கப்பட்ட பிரஜைகளாக வாழ்வதற்கு வழிவகை செய்யவேண்டும்.

இங்கிருந்து வரும் இலங்கை இந்தியர்களுக்கென்றே 50,000 ஏக்கர் நிலத்தை தேயிலை, றப்பர் செய்கைக்கு ஒதுக்கி அங்கு இவர்களை குடியேற்றினால், நாட்டின் முன்னேற்றத்துக்கும் இவர்களின் வாழ்வுக்கும் பயன் தரும் என்பதால் சிறிதும் சந்தேகமில்லை.

# பிரயாணிகளின் பொருள்களுடன் கார் சாரதி கைதானர்

யாழ்ப்பாணம், சனி

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து யாழ்தேவிமூலம் யாழ்ப்பாணம் வந்த பிரயாணிகளில் சிலர் வாடகைக் கார் ஒன்றில் இணுவிலுக்கு சென்று அங்கு தாம் கொண்டுவந்த பொருள்களை இறக்கிவிட்டு காரை அனுப்பியபின் பார்த்தபோது தமது பொருள்களில் சிலவற்றைக் காணாததால் யாழ்ப்பாணம் பொலிசாருக்கு புகார் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு. சௌந்தரநாயகம், சார்ஜண்ட் பி. எஸ். இக்னேஷியஸ், சார்ஜண்ட் கனகரத்தினம் பொலிஸ் கான்ஸ்டபிள் தம்பிராஜா ஆகியோர் மேற்படி கார் சாரதியைக் கைது செய்து விசாரணை செய்ததில் காணமற் போனதாகக்கூறப்பட்ட சுமார் 5000 ரூபா பெறுமதியான தங்கநகைகள், துணிமணிகள் ஆகியன அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகத் தெரிகிறது.

இதுசம்பந்தமாக பிரஸ்தாப கார் சாரதி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

# சிறுவனைக் கண்டுபிடிப்பதில் தொடர்ந்து முயற்சி

மாவிட்டபுரம், வெள்ளி

நேற்று அதிகாலை 4 மணியளவில் ஆழ்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த ஒரு கட்டுமரத்துடன் இனந்தெரியாத ஒரு இயந்திரப் படகு மோதியதால் கட்டுமரத்திலிருந்து கடலில் வீசப்பட்டு உயிரிழந்ததாகக் கூறப்படும் மயிலிட்டி பலாலியைச் சேர்ந்த 11 வயதுள்ள மைக்கல் றிவிலின் என்ற சிறுவனின் பிரேதம் இன்று மாலை வரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சிறுவனின் பிரேதத்தை கண்டுபிடிப்பதில் உதவுமாறு காங்கேசன்துறை பொலிசார், சட்டவிரோத தடுப்பு வேலைகளில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினரைக் கோரியுள்ளனர். இதுசம்பந்தமான தேடுதல் வேலைகளில் மயிலிட்டி மீனவர் பலர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் மயிலிட்டியைச் சேர்ந்த மயில்வாகனம் தெட்சணாமூர்த்தி என் [illegible] கொன்றை பொலிசார் சந்தேகத்தின்மீது கைப்பற்றியுள்ளனர். இது பற்றிய விசாரணைகளை காங்கேசன்துறை பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி விசாரணைகள் நடத்தி வருகின்றார்.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதியில் கூப்பனொன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் திரு. ராமலிங்கம் என்பவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## குருபூசை தினம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஒட்டுமடம் சதாநிஷ்ட்ட பொன்னப்ப சாமியார் குருபூசை அன்னதானம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்.

# சோவியத் முயற்சிக்கு ராதாகிருஷ்ணன் பாராட்டு

புதுடில்லி, ஏப்.1

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நேச உறவை ஏற்படுத்துவதற்காக ரஷ்யா மேற்கொண்ட முயற்சிகளுக்கு இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார். டாஷ்கண்ட் ஒப்பந்தம் ஏற்படும் வகையில் சோவியத் பிரதமர் கோஸிஜின் மேற்கொண்ட நடவடிக்கைகளை அவர் குறிப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

## தமிழ்சட்ட....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிடப்பட்டு தமிழ் பார்லிமெண்ட் எம் பி.க்களுக்கு சமர்ப்பிக்கப்படுமென்று கூறியிருந்தும் இன்னும் அது வெளியிடப்படாததன் காரணமென்னவென்றும் அவர் கேட்டுள்ளார்.

## வெடி வைத்து மீன் பிடித்தனராம் 4 பேர் கைது

யாழ்ப்பாணம், சனி

''டைனமைட்'' வெடி வைத்து மீன் பிடித்ததாக யாழ்ப்பாணம் பொலிசாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து உஷார் நடவடிக்கையில் இறங்கிய பொலிஸ் கோஷ்டி ஒன்று வெடி வைத்துப் பிடித்ததாகக் கருதப்பட்ட 500 ருத்தல் மீனைக் கைப்பற்றியுள்ளது. இதுசம்பந்தமாக கரையூரைச் சேர்ந்த நான்கு பேர் கைது செய்து பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் அலுவிகார தலைமையில், சார்ஜன்ட் இக்னேஷியஸ், தம்பிராசா ஆகியோர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். மீன்களை யாழ்ப்பாணம் வைத்திய அதிகாரி பரிசோதனை செய்வார். (ந. நி)

## மாணவர் சுற்றுப்பயணம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக்கல்லூரி மேல்வகுப்பு மாணவர்கள் இலங்கையின் பல முக்கிய பகுதிகளுக்கும் சுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கின்றனர். இவர்கள் இன்று காலை புறப்பட்டு கண்டி, பேராதனை, ஹட்டன், பதுளை, நுவரேலியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிக்குச் சென்றுவிட்டு வரும் வியாழக்கிழமை திரும்புவர்.

## பாக். போக்கு பற்றி ரஷ்யாவின் கவலை

மாஸ்கோ, ஏப். 1

டாஷ்கண்ட் பிரகடனத்தை முறியடிக்கும் விதத்தில் பாகிஸ்தானிய தலைவர்கள் கருத்துக்கள் வெளியிட்டுவருவது குறித்து ரஷ்யா ராஜரீக வட்டாரங்களில் கவலை நிலவுவதாக அறியப்படுகின்றது.

இந்தநடவடிக்கைகள் உள்நாட்டு நிலைமைகளைச் சமாளிப்பதற்காக மேற்கொள்ளப்படுவதாகவும், பிரச்னைகளை தீர்ப்பதற்கு வன்முறைகளைக் கையாளும் கொள்கையை பாகிஸ்தான் மீண்டும் கைக்கொள்ளாது என்றும் ரஷ்யா வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org